# மட்டுவில் – சந்திரபுரம் பிரதேசத்தில் அண்ணமார் வழிபாட்டின் சமகாலச் செல்நெறி: கொட்டைப்புலவு அண்ணமார் ஆலயத்தை அடிப்படையாகக் கொண்டது.

சங்கவி.ப

**ஆய்வுச்சுருக்கம்:**

இந்துப் பண்பாட்டு மரபில் வழிபாடானது இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளது. அவை ஆகமம்சார் வழிபாடு, ஆகமம்சாரா வழிபாடு என இருநிலைப்பட்டது. ஆகமம்சார் வழிபாட்டு முறையானது ஆகமம்சார் நெறிமுறைகளுக்கு அமைவாகப் பெருந்தெய்வங்களை அடிப்படையாகக் கொண்டு வழிபடப்படும் வழிபாட்டு முறையாகும். ஆகமம்சாரா வழிபாட்டு முறையானது ஆகம நெறிமுறைகளுக்குள் அடங்காது சிறு தெய்வங்களை அடிப்படையாகக் கொண்டு வழிபடப்படும் வழிபாட்டு முறையாகும். நாட்டார் தெய்வங்களைக் கிராமிய மக்கள் ஆண் தெய்வங்கள், பெண் தெய்வங்கள் என வகைப்படுத்தி வழிபடும் மரபு உள்ளது. இத்தெய்வங்களுள் பொல்லுக் கிழவன், சிவகுடும்பன் என்று அழைக்கப்படும் அண்ணமார், ஆண் தெய்வங்களுள் ஒருவராக வழிபடப் படுகின்றார். கிராமிய மக்களிடையே பண்டுதொட்டு இன்று வரை அண்ணமார் வழிபாடு சிறப்பிடம் பெற்று வருகிறது. தற்காலப்பகுதியில் சமூக வளர்ச்சிப் போக்கின் அடிப்படையில் நாட்டார் தெய்வ வழிபாடானது ஆகமம்சார் நெறிமுறைகளுக்குள் உள்வாங்கப்படும் தன்மையினை அவதானிக்க முடிகிறது. இதற்கு அண்ணமார் வழிபாடும் விதிவிலக்கல்ல. யாழ்ப்பாணப் பகுதி மக்களிடையே தொன்றுதொட்டுப் பேணப்பட்டுவரும் அண்ணமார் வழிபாடு சாதியப் பகுப்பு முறையினை அடிப்படையாகக் கொண்டு வழிபடப்பட்டு வருகிறது. யாழ்ப்பாணத்தில் பல அண்ணமார் வழிபாட்டு இடங்கள் நிறுவனமயப்படுத்தப்பட்டு சமஸ்கிருதமயமாக்கலுக்குள் உள்வாங்கப்படும் நிலையில் இன்றும் நாட்டாரியல் மரபுகளைப் பேணி வழிபாடுகள் இடம்பெற்று வருவதை வெளிக்கொணரும் நோக்கில் இந்த ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்து மட்டுவில் சந்திரபுரப் பகுதியில் அமைந்துள்ள கொட்டைப் புலவு அண்ணமார் ஆலயத்தை ஆய்வு எல்லையாகக் கொண்டு ஆலயத்தின் தோற்றம், வளர்ச்சி, சடங்குகள் பற்றி எடுத்துரைப்புச் செய்வதன் ஊடாக, இந்த ஆய்வானது முன்னெடுக்கப்பட்டுள்ளது. நாட்டார் வழிபாடுகள் சமஸ்கிருத மயமாக்கலுக்குள் உட்படுத்தப்படுகின்ற நிலையில் இவ்வாலயமானது பழமையைப் பேணிப் பாதுகாத்தும் புதுமை யைப் புறக்கணிக்காமல் ஏற்றும் வழிபாடுகள் நடைபெற்று வரும் இடமாகத் திகழ்கிறது. மேலும் இந்த ஆய்வானது கள ஆய்வின் உத்தி முறைகளினூடாகப் பெறப்பட்ட தரவுகளை உள்ளடக்கப் பகுப்பாய்வு முறைமைக்கு உட்படுத்தி விபரண ஆய்வு மற்றும் வரலாற்றியல் ஆய்வு முறையியல்கள் ஊடாக கட்டமைக்கப்பட்டுள்ளது.

**திறவுச்சொற்கள்:** கிராமியத்தெய்வ வழிபாடு, அண்ணமார், சமகாலச் செல்நெறி, சமஸ்கிருத மயமாதல், சடங்கு

இந்துநாகரிகத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
vimalthambirajah83@gmail.com